International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

# அஞ்சலி வைபவம்

**Dr. M.S.Madhavachari**
*Asst. Professor, Dept. of Sanskrit, St.Joseph's College, Trichy.*

சிறு பிராயம் முதலே நம் பெரியோர், நாம் பெரியோரைப்பார்க்கும் போதும், உலகிற்கே பேரியோனாம் பெருமாளை பார்க்கும் போதும் (ஸேவிக்கும் போதும்) கைகூப்ப பழக்கியுள்ளனர். அந்த கைகூப்பும் பழந்தொழிலுக்குத் தான் எத்தனை பெருமை? கண்ணன் கழல் தொழக்கூப்பிய கையின் பெருமையினை வாசித்தும், கேட்டும், பார்த்தால் எண்ணம் வியந்திட யமுனை துறைவரியம்புதலால் உளமிதோ வியக்கிறது. உரைத்திட விழைகிறது. சற்றே ஆழ்ந்திடுவோம் அவ்விலக்கியச் சுவையினில்.

**இதிகாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ருஹயேத்**

என்பர் பெரியோர். அவற்றிலும் பரக்கப்பேசப்பட்டுள்ளது இவ்வஞ்ஜலி வைபவம்.

## கூப்பிய கைகள்

ஸ்ரீமத் ராமாயணத்தில் உணர்த்தப்பட்ட ஒர் அர்த்த விசேஷம். ஒர் மாரிக்காலம். ஸ்ரீசக்ரவர்த்தி திருமகன் மால்யவானில் வஸிக்கிறார். ஸுக்ரீவமஹாராஜா கிஷ்கிந்தா பட்டிணத்தில் ஸுகமாக இருக்கிறார். மழைக்காலம் முடித்து ஸரத்காலம் ஆரம்பம் ஆகிறது. அரசர்கள் தம் சேனையைத் திரட்டி மாற்றரசரை நோக்கி புறப்படும் காலம். ஸுக்ரீவமஹாராஜா சக்ரவர்த்தி திருமகனை காண இன்னும் வரவில்லை. பெருமாளின் மனதில் வருத்தம். ஸீதையைப் பிரிந்த வாழ்வின் தாபத்தால் கோபமாகி, கடுமை கூடுகிறது. இளைய பெருமாளை நோக்கி, ஸுக்ரீவனிடம் சென்று ஸீதையைத் தேடும் விஷயத்தை ஞாபகப்படுத்து என்று கூறியவர்.

**ந ச ஸங்குசித: பந்தா: யேந வாலீ ஹதோ கத:**

வாலி சென்ற வழி மூடப்படவில்லை எனக்கோபக்கனலைக்கக்குகிறார். தூண்டப்பட்ட இளைய பெருமாளும் கோபம் கொள்கிறார். கிஷ்கிந்தை சென்று

மஹாராஜரின் இருப்பிடத்தை அடைகிறார். தன் வரவை அங்கதன் மூலம் தெரிவிக்கிறார். நிலைமையின் தீவிரம் மந்திரிகள் மஹாராஜரிடம் தெரிவிக்கின்றனர். மஹாராஜரோ வாயுபுத்திரனால் உரைக்கப்பட்டு முன்னமே நான் வான்வீரர்களனைவரும் அணியாகத் திரள ஆணை அனுப்பியுள்ளேன். இதையறியாமல் ஏன் என்மேல் கோபம்? எனக் கலங்குகிறார். அதே சமயம் பயமில்லை என்கிறார். அருகிருந்து அஞ்ஜனை மைந்தனோ, “மஹாராஜரே! ஶரத்காலம் தொடங்கிய பின்னும் ஆணை கொடுத்தும், ராமனைச் சந்திக்காமலிருந்தால் தீவிர முயற்சியில்லாமை இவையே பெருமானின் கோபத்திற்குக் காரணங்கள். தவறுடைய உமக்கு ஓரஞ்சலி செய்து அபராதத்தைப் பொறுத்தருளும்படி ப்ரார்த்தனை செய்வதே வழி” என உரைக்கிறார்.

**க்ருதாபராதஸ்ய ஹிதே நாந்யத் பஸ்யாம் யஹம் க்ஷமம்**
**அந்தரேணாஞ்ஜலிம் ப்த்த்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதாத்**

அவ்வாறே இளையபெருமாளிடம் கைகூப்பி அபசாரக்ஷமாபனம் ப்ரார்த்தித்துப் பயன் பெற்றார் மஹாராஜர்.

## ஸ்ரீ பாகவதத்திலிருந்து ஓர் அனுபவம்

எம்பெருமான் அரியுருவாகி இரணியனை வதம் செய்தார். அதன் பின்னும் சீற்றம் அடங்கவில்லை அருகிலே செல்ல தேவர்கள் மட்டுமல்ல மஹாலஷ்மியும் தயங்கினாள். ஸ்ரீப்ரஹலாதாழ்வானைப் பணித்தார் நான்முகன், உடனே ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வனும், அருகில் சென்று நமஸ்கரித்து அஞ்ஜலி ஹஸ்தராய் நின்றார்.

## உபேத்ய புவி காயேந நநாம வித்ருதாஞ்சலி

என்கிறார் ஸ்ரீஶுகப்ரஹ்மம் அதன்பின் எம்பெருமான் சீற்றம் தணிந்து தேவர்களின் ஸ்தோத்ரங்களை ஏற்றுக்கொண்டார்.

## ஸ்ரீ பகவத்கீதை காட்டும் சித்திரம்

ப்ரப்ருத விபூதியில் அனைத்தும் தானே என்றான் கீதாசார்யன். பாரெல்லாம் படரும் அவ்வதிசயரூபமாம் விச்வரூபம் பார்க்க ஆசைப்பட்டான் பார்த்தன்.

“உன் பார்வையால் எனைக் காண இயலாது. தெய்வீகமான பார்வை கொடுக்கிறேன்”. எனக்கூறி அநுக்ரஹித்தான் பரம்பொருள். விச்வரூபம் காட்டினான். எங்கும் வியாபித்த அந்த ரூபத்தைப்பார்த்து அதிசயித்தான் பார்த்தன். மயிர்க்கூச்சமெடுத்து பூமியில் விழுந்து நமஸ்கரித்தான். கூப்பிய கைகளுடன் ஸ்ரீபார்த்தசாரதியை ஸ்தோத்ரம் செய்தான்.

**திதஸ்ஸ விஸ்மயாவிஷ்ட்டோ ஹ்ருஷ்ட ரோமா தநஞ்ஜய:**
**ப்ரணம்ய சிரஸா தேவம் க்ருதாஞ்ஜலிரபாஷத:**

தேவாதி தேவன் நீ. த்ருதராஷ்ட்ர புத்திரர்களை வதம் பண்ண வேணும் என்பதற்காக எனக்கு வீரமளிக்க நீ காட்டிய இந்த ரூபத்தைக் கண்டு பயமேற்படுகிறது. நீ யார்? என உரை எனக் கூறுவான் பார்த்தன். பின்னும் கைக்கூப்பிப் ப்ராத்திப்பான். “நீ ஸுமுகமான க்ருஷ்ணனாக பழைய பார்த்தஸாரதியாக ஸேவை தருவாயாக” என்று.

**ஏதச்ச்ருத்வா வசநம் கேசவஸ்ய**
**க்ருதாஞ்சலி: வேபமாந: கிரீடீ**

உலகின் பாரம் குறைக்க அவதரித்தவனே நான். என்னால் ஸ்ங்கல்பிக்கப்பட்ட கௌரவஸேனையின் வதத்திற்கு வெறும் பகடைக்காயாக நீ ஆகுக” என்று கூறிய எம்பெருமானிடம் க்ருதாஞ்சலி: கிரீடீ அஞ்ஜலிஹஸ்தனாக (கூப்பிய கைகளிடன்) நமஸ்கரித்து நின்றான். அர்ஜுனன் என்கிறார் கீதையில்.

ஈண்டு உற்று நோக்குக எம் பெருமான் விச்வரூபம் காட்டியவுடன் விக்கித்துக் கைக்கூப்பினான் அர்ஜுனன். பயந்தவுடன் பழைய பார்த்தஸாரதியாகும் படி ப்ரார்த்தனையையும் கூப்பிய கைகளிடன் செய்கிறான்.

## பூர்வர்கள் காட்டும் அஞ்ஜலி

இதுவரை பேசியபடி புராண இதிஹாஸங்களில் கோடி காட்டப்பட்ட “அஞ்ஜலிவைபவ’த்தில் ஆழ்ங்கால்பட்டு உரைக்கிறார் ஸ்வாமி ஆளவந்தார்.

**த்வதங்க்ரிமுத்திஸ்ய ............. ஸக்ருத்க்ருதோஞ்சலி:**

“எம்பெருமான்! உன் திருவடிகளையே உபாயமாகவும் ப்ராப்யமாகவும் எண்ணி ஏதோ ஒரு சமயம், யாரேனுமொருவன், ஏதோ ஒர் விதத்தில், ஒரு முறை அஞ்ஜலி செய்தால் அப்போதே அவனுக்குத் குறைகள் யாவும்

நீங்குகின்றன. நன்மைகள் பெருகுகின்றன. குறைவதேயில்லை” என்பது இதன் பொழிப்புரை.

## இங்கு ஓர் ஸந்தேஹம்

பக்தியோகத்தினாலோ ப்ரபத்தியோகத்தினாலோ தான் நான் அடையத்தகுந்தவன். மற்றவிதத்திலல்ல என்ற எம்பெருமானின் கூற்றுக்கு மாற்றாகத் தோன்றுகிறதே...... அஞ்ஜலி செய்வதே மோக்ஷஸாதனம் ஆகுமா?

ஆளவந்தாரது ஶ்லோகத்திற்கு ஸமாதானம் ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ள அஞ்ஜலிவைபவம் எனும் ரஹஸ்யத்தில் 1)‘ப்ரஸாதனமான அஞ்ஜலிக்கு ப்ரபத்தி கர்பத்வம் சொன்னால்” என்று தொடங்கியும்.

2)அங்ஙனன்றிக்கே மாலா கரணாதிகளான வல்லாத பகவத் கர்மங்கள் போலே இவ்வஞ்ஜலியும் ஒரு ஸத்கர்மவிஶேஷமாய் நின்றால்’ என்று தொடங்கியும் இரண்டு விதமாக ஸ்தோத்ர ரத்ன ஶ்லோகத்தை நிர்வாகம் செய்தருளுகிறார்.

## முதல் பக்ஷம்

“எம்மானே நீயே தஞ்சம்” என்று கூறி அவன் திருவடிகளைக் குறித்து அஞ்ஜலி செய்தால் அது ப்ரபத்திகர்பமான (ப்ரபத்தியை உள்ளீடாகக்கொண்ட) அஞ்ஜலி. பரந்யாஸ வ்யஞ்ஜகமுத்ரை. இந்த ஆத்மரக்ஷணபாரத்தை ஸமர்ப்பிக்கும் முத்ரை.

ப்ரார்த்த்நா பூர்வக பரந்யாஸம் பண்ணின அகிஞ்சனனுடைய ஸ்வரக்ஷணார்த்த ஸ்வவ்யாபார நிவ்ருத்தி ரூபபலவிஶேஷ வ்யஞ்ஜக முத்ரை அஞ்ஜலி. பரந்யாஸம் செய்யும் போது ஸமர்ப்பிக்கப்படும் அஞ்ஜலி. ஆதலின் இவ்வஞ்ஜலிக்குப் பயனாக வல்வினை மாய்ந்து பேரின்பம் பெருகும், என்று சொல்வது ஶாஸ்த்ர ஸம்மதம் ஸ்க்ருத்க்ருதோ அஞ்ஜலி என்று கூறுவதால் பரந்யாஸவ்யஞ்ஜக முத்ரை யெனக்கொள்ளலாம்.

## இரண்டாம் பக்ஷம்

அவ்வாறின்றி ஓர் ஸத்கர்ம விஶேஷமான அஞ்ஜலி எம்பெருமானை ஆஶ்ரயிக்கத் தடையாயிருக்கும் (பாபங்களை) கர்மாக்களைப் போக்கி ஆசார்யஸம்பந்தம் க்ஞானப்ராப்தி பக்தியோ ப்ரபத்தியோ செய்யும் படி அநுகூலித்தல் என்று பரம்பரையாய் மோக்ஷஸாதனமாகிறது.

### இவ்வர்த்தத்தைத் தெள்ளெனக் காட்டும் ரஹஸ்யக்ரந்தப் பகுதி வருமாறு

“இட்டபடை கல்படையாய் பாபக்ஷயம் ஸத்வோந்மேஷம் ஸத்யக்ஞானம் பக்திப்ரபத்திகளென்று, இப்பரம்பரையாலே மோக்ஷஸாதநத்வமுண்டாகையாலே

கீழ்ச் சொன்ன ஸர்வாநிஷ்ட நிவ்ருத்திக்கும், ஸர்வாபீஷ்டஸித்திக்கும் விரோதமில்லை. (அஞ்ஜலிவைபவம்)

**ஹஸ்தீஶ! துக்க விஷதிக்த பலா நுபந்திநி**
**ஆப்ரஹ்மகீடம் அபராஹத ஸம்ப்ரயோகே !**
**துஷ்கர்மஸஞ்சய வஶாத் துரதி க்ரமே ந:**
**ப்ரத்யஸ்த்ரமஞ்ஜலிரஸௌ தவ நிக்ரஹாஸ்த்ரே”**

(வரதராஜபஞ்சாஶத்)

மேற்கண்ட ஸ்வாமியின் ஸூக்தி நாம் செய்யும் அஞ்ஜலி எம்பெருமானை ப்ரீதி செய்வித்து நமக்கு நன்மை பயக்கும் எனக் காட்டுகின்றது.

நம் ஸம்ப்ரதாய ரீதியாக ப்ரதான விஷயங்களை ப்ரதான ஶதகம் எனும் ரஹஸ்யத்தில் ஸ்வாமிதேசிகன் அருளிச்செய்துள்ளார் அதில் எண்பத்தைந்தாவது விஷயமாக “ந க்ஷமாமி என்கிறவனை கடுக ப்ரஸாதிப்பிக்குமவற்றில் அந்தரேண அஞ்சலிம் பத்வா, அஞ்சலி: பரமா முத்ரா இத்யாதிகளிற்படியே அநுதாப க்ருதக்ஞத்வாதியுக்தமான அஞ்சலிபந்தம் ப்ரதானம் என்று கூறினார்.

எம்பெருமானை ஸுலபமாக வஶப்படுத்தும் ஒர் செயல் கைகள் கூப்புதல்.

## கைகள் கூப்ப(பி)ச் சொல்லும் ஆழ்வார்

புருஷோத்தமனாம் எம்பெருமானிடம் தன் காதலை வெளிப்படுத்த பக்ஷிகளை யாசிக்கும் (தூதுவிடும்) ஆழ்வார் வைகல் பூங்கழிவாய் வந்து மேயும் குருகினங்கள்! செய்கொள் செந்நெலுயர் திருவண்வன்டூருறையும் கைகொள் சக்கரத்தென கனிவாய்ப் பெருமானைக் கண்டு கைகள் கூப்பிச்சொல்லீர் ! வினையாட்டியேன் காதன்மையே. எம்பெருமானிடம் கைகள் கூப்பி விண்ணப்பம் செய்யுங்கள் என் ஆசையை என்கிறார்.

இதோ திருவாய்மொழியில், “பாதம் கை தொழுது பணியீர்”, புணர்த்த கையினராய் என்று பலவிதமாயும் அஞ்ஜலி செய்துரைக்க வேண்டுகிறார். ஆசார்யர்கள் மூலமாக எம்பெருமானை ஆச்ரயிக்கிறார் என ஸ்வாபதேசம் உரைப்பர். கைகள் கூப்பியுரைத்தல் அவன் அவசியம் இரங்குபவன் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம்.

இவ்வாறு எம்பெருமானுக்கு நம்மேல் வெறுப்பு வாராமலும், வந்த வெறுப்பைப் போக்கியும், அவனது ப்ரீதியை உண்டாக்குவதான அஞ்ஜலி எம்பெருமான் திறத்தில் செய்து. எல்லோரும் இன்புறுக.